வியாபாரம் பெருக விளம்பரம் செய்க !

www.nilafrance.com

# நிலா

இருமாத இதழ்
இலவச வெளியீடு
(4000 பிரதிகள்)

வைகாசி - ஆனி 2013 | எமது அச்சகத்தின் ஓர் விளம்பர வெளியீடு | இல. 21

**அதிபர்** François Hollande ஆட்சிக்கு வந்த ஒரு வருட காலத்திற்குள், தனது 31வது தேர்தல் வாக்குறுதியான 'ஒரே பாலினத்தவர்களுக்கான திருமணம்', மற்றும் குழந்தைகள் தத்தெடுப்பு ஆகியவற்றை சட்டமாக அமுல்படுத்தியுள்ளார். மூன்று மாதக் கடும் விவாதம், பாரிய எதிர்ப்புப் பேரணிகள் அனைத்தையும் கடந்து, கடந்த ஏப்ரல் மாதம் பாராளுமன்றத்தில் 311 எதிர் 225 வாக்குகளுடன் சட்டம் அமுலாகியுள்ளது.



பிரான்சில் இவ்வளவு அதிர்வுகளைச் சந்தித்த இச் சட்டமூலம் உலகத்திற்கு ஒன்றும் புதியதல்ல. ஏற்கனவே 13 நாடுகளில் இச்சட்டம் அமுலில் உள்ளது. ஐரோப்பாவில் ஒல்லாந்து, பெல்ஜியம், ஸ்பெயின், நோர்வே, சுவீடன், டென்மார்க், ஐஸ்லாந்து ஆகிய நாடுகளில் அமுலில் உள்ளது. போர்த்துக்கல் குழந்தை தத்தெடுப்பை தவிர்த்து ஒரு பாலினத் திருமண அனுமதியை மட்டும் வழங்கியுள்ளது. ஜேர்மனி, பின்லாந்து, சுவிஸ், அயர்லாந்து மற்றும் செக் குடியரசு ஆகிய நாடுகளில் ஒரே பாலினத்தவர்கள் சேர்ந்து வாழ மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் சோசலிச அரசைப் பொறுத்தவரையில் இச் சட்ட அமுலாக்கம் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வே. 1944ல் பெண்களுக்கான வாக்குரிமை, 1975ல் கருக்கலைப்புக்கான சட்ட அனுமதி, 1981ல் தூக்குத் தண்டனை ஒழிப்பு போன்ற சட்ட அமுலாக்கங்கள் எவ்வகையான அதிர்வுகளுக்கும், எதிர்ப்புகளுக்குமிடையில் அமுலாக்கப்பட்டதோ அதே போன்றே இச்சட்ட அமுலாக்கமும் நிறைவேறியுள்ளது.

சட்ட அமுலாக்கத்தை எதிர்த்து பல்வேறு பேரணிகள் பிரான்சில் நடாத்தப்பட்டுள்ளன. UMP கட்சி, Le Pen இன் தேசிய முன்னணி மற்றும் கிறிஸ்தவ அமைப்புக்கள் ஆகியவற்றின் கூட்டணியால் ஒருங்கமைக்கப்பட்ட இவ் எதிர்ப்புப் பேரணியில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டதாக புள்ளிவிபரக் கணக்குகள் தெரிவிக்கின்றன. எந்தவொரு பேரணிகளிலோ ஆர்பாட்டங்களிலோ பேணப்படாத அளவு, மிகக் காட்டமான முறைகள் தங்கள் மீது பிரயோகிக்கப்பட்டதாக பொலிசார் மீதும், ஒருங்கமைப் பாளர்கள் மீதும் பெரும்பாலான ஊடகங்கள் குற்றம் சாட்டியுள்ளன. ஒருசில வன்முறைகள் நடந்திருந்தாலும் கூட, வயதானவர்கள் முதல் குழந்தைகள் வரை குடும்பம் குடும்பமாக பிரான்ஸ் மக்கள் வீதியில் இறங்கியதை உலகம் திரும்பிப்



## Mariage pour tous

# பெரும் அதிர்வுகளைச் சந்தித்த பிரான்ஸ்

நிலா
தொடர்புகளுக்கு :
சங்கீதா அச்சகம்
39, Bld de la Chapelle - 75010 PARIS (Métro : La Chapelle)
Tél./ Fax: 01. 44. 72. 08. 94 E-mail : sangeethafrance@yahoo.com

பார்க்கத்தான் செய்தது.

உலகளவில் அதிக மக்களால் நேசிக்கப்படும் நாடு, பிறதேசத்தவர் குடியேறி வாழ விரும்பும் நாடு, தனி மனித உரிமைகள் சரியான முறையில் பேணப்படும் நாடு என பெருமைகொண்ட நாடு பிரான்ஸ். ஆயினும், ஒரே பாலினத் திருமணத் திற்கு எதிராக பெருந்திரளான பிரான்ஸ் மக்கள் போராட்டத்தில் இறங்கியதும், ஒரே பால் நாட்டமுடையவர்களுக்கெதிரான தாக்குதல்களும், பெருமைமிக்க பிரான்சின் முகத்தை உலக அரங்கில் சற்று மாற்றித்தான் உள்ளது. வெவ்வேறு நாடுகளில் இவ் விவாதம் எடுத்துக் கொண்ட முறை பிரான்சோடு ஒப்பிடுகையில் எவ்வளவோ மேல்நிலையில் இருந்தது கண்கூடு. பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவின் சில மாகாணங்களில் மட்டுமே இத்தகைய கடுமையான நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன.

இவ் வகையான காட்டமான உரையாடல்கள் ஒரே பாலின நாட்டமுள்ளவர்கள் மீது, பொது வெளியில் பயத்தை, எதிர்ப்பை, அருவருப்பை ஏற்படுத்தும் தன்மையையே கொண்டுள்ளன. இது மிகவும் ஆபத்தானது என்கிறார் கனடாவைச் சேர்ந்த பாலியல் சமூகவியலாளரும் கருத்தாளருமான Michel Dorais .

அவர் மேலும் தெரிவிக்கையில் 'ஒரு சட்டத்தை ஏற்படுத்துவதோ, எடுப்பதோ இலகுவானது. மாறாக மனரீதியாக அவர்கள் பால் ஏற்பட்டுள்ள தாக்கங்களைக் களை–வது கடினமானது. தற்போதைய அரசும் ஆதரவாளர்களும் இம் மாற்று மனநிலையைக் களைய கடின–மாக உழைக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள் என்கிறார்.

'நாங்கள் ஒரே பாலின நாட்டமுள்ளவர்களுக்கு எதிரான வர்கள் அல்ல, ஆனால் ஒரே பாலினத் திருமணம் குடும்பங்களைச் சிதைத்து விடும். குழந்தைகள் மீதான உரிமைகள் நிலைப்பாட்டில் தடம்புரண்டால், குடும்ப முறைகள் அடுத்த சந்ததிகளில் எவ்வாறாக இருக்கும்? என்ற கேள்வியை எழுப்புகிறார்கள் எதிர்ப்பாளர்கள்.

அரச ஆதரவாளர்களோ, கனடா வைப் பாருங்கள்! இச் சட்டம் அமுலாக்கப்பட்டு 10 வருடங்கள் ஆகிவிட்டன! என்ன பாரிய முறைக்கேடுகள் நடந்து விட்டன? பிரான்சுக்கு முன்னதான 13 நாடுகளில் எந்தவிதமான பாரிய முறைப்பாடுகளும் இதுவரை பதியப்படவில்லை என உதாரணம் காட்டுகிறார்கள்.

இச் சட்டம் தற்போது அரசியல் சட்டப் பரிசீலனைச் சபையின் அனுமதியையும் பெற்றுவிட்டது. பிரான்ஸ் மக்கள் தற்போதைய நிலையில் இப் பக்கத்தைப் புரட்டி விடவே விரும்புகின்றனர். தொடரும் வேலை வாய்ப்பின்மை, பொருளாதார வீழ்ச்சி ஆகியவற்றின் பக்கம் கவனத்தைத் திருப்புவதே அவர்களுக்கு முக்கியமானது. தொடர்ந்து எதிர்ப்புப் பேரணி களுக்கான அழைப்புகள் விடுக்கப் பட்டாலும் பங்குபற்றுவதில் எவ்வித பலனும் இல்லை என்பது 69 சதவீதத்திற்கும் அதிகமான பிரான்ஸ் மக்களின் கருத்தாக இருக்கிறது.

சட்டம் அமுலாக்கப்பட்டு 4 நாட்களில் பிரான்சில் முதல் முறையாக ஒரே பாலினத்தவர்களுக்கான, முற்றிலும் ஆண்களுக்கேயான கண்காட்சி பாரிசில் நடைபெற்றுள்ளது. கண்காட்சியில் திருமண மோதிர வடிவமைப்பாளர்கள், நகை வடி வமைப்பாளர்கள், திருமண மண்டப மற்றும் கொண்டாட்ட ஒழுங்கமைப் பாளர்கள் ஆகியோர் உள்ளடக்கப் பட்டிருந்தனர். யூன் மாத இறுதிக்குள் பிரான்சில் முதலாவது ஒரே பாலினத் திருமணம் சட்ட பூர்வமாக இடம் பெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# பிரான்சில் தீ விபத்துகளால் வருடத்திற்கு 800 உயிர் இழப்புக்கள்!



இவற்றில் அதிகளவு நமது வதி விடங்களில் ஏற்படும் தீ விபத்துக் களாலேயே ஏற்படுகின்றது. இவ் இழப்புக்களைக் குறைக்க அனைத்து வீடுகளிலும் புகை உணர்கருவிகள் பொருத்தப்பட வேண்டியதன் அவசி யத்தை அரசு வலியுறுத்துகின்றது.

இவ் உணர்கருவிகள் மூலம், தீ விபத்து ஏற்பட்டு ஆறு செக்கன்களுக்குள் தீயணைப்புப் படையினருக்கு தகவல் சென்றுவிடும். இதன் மூலம் தீ விபத்துகளுக்கு படையினர் துரித நடவடிக்கை எடுக்கவும், உயிரிழப்புக்களை தவிர்க்கவும் அரசு திட்டமிடுகிறது.

8 மார்ச் 2015 முதல் புகை உணர் கருவிகள் ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இத் தகவல்களை வீட்டு வசதிசார் அமைச்சர் Cécile Duflot தெரிவித்துள்ளார்.

# பிரான்சுக்கு அல்கெய்தா மிரட்டல்!



உலகெங்குமுள்ள பிரான்ஸ் தேசத்தின் அனைத்து நலன்களையும் அழித்தொழிப்போம் என அல்கெய்தாவின் அச்சுறுத்தும் காணொளி ஒன்று வெளியாகியுள்ளது. இது தொடர்பான நிருபர்களின் கேள்விக்கு பதிலளித்த பிரான்ஸ் அதிபர், மாலியில் பிரான்ஸ் படைகளின் அல்கெய்தாவிற்கு எதிரான தாக்குதல்களை அடுத்தும், பிரான்சின் பயங்கரவாதத்திற்கு எதிரான நிலைப்பாடுகளை அடுத்தும் எமக்கு அச்சுறுத் தல்கள் வந்த வண்ணமே உள்ளன. 23 ஏப்ரலில் லிபியாவில் பிரான்ஸ் நாட்டுத் தூதரகம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு ஆளானது. இவையெல்லாம் எமக்கு பயங்கரவாதத்தின் இருப்பை வெகுவாக எடுத்துக் காட்டுகின்றன. எனவே பயங்கரவாதத்தை அழித்தொழிப்பதில் எமது நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படப் போவதில்லை. அல்கெய்தா உட்பட சகல பயங்கரவாதக் குழுக்களையும் ஒழிக்கும் வரை மாலியில் பிரான்ஸ் படைகள் தொடர்ந்து செயற்படும் எனவும் பிரான்ஸ் அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரான்ஸ் நாட்டவர்கள் நோர்வே செல்லத் தடை?

பிரான்ஸ் நாட்டவர்கள் எங்கள் தேசத்திற்குள் நுழைய தடை விதிக்க வேண்டும் என நோர்வே முன்னேற்றக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் போர்க்கொடி தூக்கியுள்ளார். ஆரம்பத்தில் பல்கேரியா மற்றும் (Roms) என்று அழைக்கக் கூடிய ரூமேனிய மக்களுக்கே தடைவிதிக்கக் கோரியிருந்தார். தற்போது பிரான்ஸ் மக்களையும் இணைத்துள்ளார்.

'பிரான்ஸ் மக்கள் சட்டம் ஒழுங்குகளை மதித்து நடக்காதவர்கள். குறிப்பிட்ட அளவிற்கு மேலானவர்கள் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள்' என குற்றம்சாட்டும் அவர் நாம் தடை செய்வது என்று முடிவெடுத்துவிட்டால் ஏன் ஒரு குறிப்பிட்ட நாட்டவர்களை மட்டும் தடை செய்ய வேண்டும்? எமக்கு 'விரும்பத்தகாதவர்கள்' எனக் கருதும் அனை– வரையும் தடை செய்யத்தான் வேண்டும் எனவும் கண்டிப்பானதொனியில் கருத்துவெளியிட்டுள்ளார்.



மேலும் அவர், நோர்வேயில் பிச்சை எடுப்பவர்கள் முற்றாக அழிக்கப்பட வேண்டும் எனவும், இவர்களை கட்டுப்படுத்துவதற்கு அரசு பொலிசாருக்கு முழுச் சுதந்திரத்தையும் வழங்கவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.



Julie Gayet

## இணைய அவதூறுக்கு எதிராக பிரான்ஸ் நடிகை வழக்குத்தாக்கல்!

அதிபர் François Hollande உடன் நடிகை Julie Gayet ஐ இணைத்து இணையங்களில் சில வதந்திகள் வெளியாகியிருந்தன. கொதித்துப் போன நடிகை செய்தி வெளியிட்ட இணையத்திற்கு எதிராக நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

40 வயதாகும் Julie Gayet இரண்டு குழந்தைகளுக்குத் தாயாவார். 50 இற்கும் அதிகமான படங்களில் நடித்துள்ள இவர் சின்னத்திரையிலும் பிரபலமானவர். 2012 ல் அதிபரின் தேர்தல் பிரச்சார காணொளி ஒன்றில் நடித்த இவர், ஒரு பாலினத் திருமணம் தொடர்பான அரசசார் பிரச்சாரங்கள் மேற்கொண்டவரும் கூட.

இதே போன்று ஊடகத்திற்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கொன்றில் பாடகர் Benjamin Biolay வெற்றி பெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது. 2010 இல் Carla Bruni-Sarkozy உடன் இணைத்து ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தமைக்கு எதிராக இவர் வழக்கு தாக்கல்செய்து வெற்றி பெற்றிருந்தார்.

**உலகம் ஒரு நாடகமேடை – அதில் உனக்கான சரியான பாத்திரத்தை தேர்ந்தெடுத்துக்கொள் – சேக்ஸ்பியர்**

## பிரான்சில் பலமாக காலூன்றும் McDo



உலகெங்கும் 33 000 Mc Do துரித உணவகங்கள் பரந்து கிடக்கின்றன. அவற்றில் பிரான்சில் மட்டும் 1200 க்கும் அதிகமான உணவகங்கள் இயங்குகின்றன. இந்த ஆண்டு பிரான்ஸ் உணவகங்களுக்கு 200 மில்லியன் யூரோக்கள் மீள் முதலீடு செய்யப்படுகிறது. இம் மீள் முதலீட்டின் மூலம் 40 புதிய உணவகங்களுக்கும் 3000 புதிய வேலை வாய்ப்புக்களுக்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக பிரான்ஸ் Mc Do குழாம் தலைவர் தெரிவிக்கிறார்.

100 சதவீத பிரான்ஸ் மூலப்பொருள் பாவனை, பிரான்ஸ் வேலை வாய்ப்புச் சந்தையில் Mc Do வின் பாத்திரம் போன்ற காரணிகளினால் Mc Do துரித உணவகம் பிரான்சில் பலமாக தனது கால்களை ஊன்றிவருகிறது.

இத்துரித உணவகப் பாவனையாளர்களில் 66 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் 30 வயதிற்கு குறைந்தவர்களே.

முதலாவது Mc Donald உணவகம், Mc Donald சகோதரர்களால் 1937ல் ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும் தற்போது இயங்கிவரும் உணவகங்கள் Mc Donald சகோதரர்களுடைய பெயர் உரிமத்தை வாங்கி Ray Kroc ஆல்ஆரம்பிக்கப்பட்டது. 1955 ம் ஆண்டு Mc Danald's என்ற பெயரில் 52 வயது Ray Kroc சிக்காக்கோ நகரில் முதல் உணவகத்தை ஆரம்பித்து வைத்தார். அன்றைய முதல் நாள் வருமானம் மட்டும் இன்றைய கணக்கீட்டின்படி 350€ வாக இருந்தது. இது அன்றைய காலத்தில் ஒப்பீட்டளவில் மாபெரும் சாதனையாக கருதப்பட்டது.

# பிரான்ஸ் தமிழர் நிகழ்வுகள்

● **காரை நலன்புரிச் சங்கம்**

காரை நலன்புரிச் சங்கத்தின் ஒன்றுகூடலும் பொதுக்கூட்டமும் 31.03.2013 அன்று பாரிசில் நடைபெற்றது.

● **முத்தமிழ் விழா**

புங்குடுதீவு மக்கள் ஒன்றியத்தின் முத்தமிழ் விழா 14.04.2013 அன்று பாரிசில் நடைபெற்றது.

● **இசைத்திறன் போட்டி**

தமிழர் கலை பண்பாட்டுக் கழகத்தின் கா்நாடக சங்கீத இசைத்திறன்போட்டி 21.04.2013 அன்று Sarcelles இல் நடைபெற்றது.

● **பொண்டி தமிழ்ச்சங்கம்**

பொண்டி தமிழ்ச் சங்கம் நடாத்திய விளையாட்டுப் போட்டி 27.04.2013 அன்று Bondy யில் நடைபெற்றது.

● **சலங்கை**

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 13வது சலங்கை 28.04.2013 அன்று பாரிசில் நடைபெற்றது.

● **மன்னார் அபிவிருத்தி அமைப்பு**

பிரான்ஸ் மன்னார் அபிவிருத்தி அமைப்பு நடாத்திய ஆண்டுவிழாவும் வசந்ததீபம் மலர்வெளியீடும் 28.04.2013 அன்று பாரிசில் நடைபெற்றது.

● **இசைத் தட்டு வெளியீடு**

முத்தமிழ் கலாமன்ற ஆதரவோடு பாசை மாநகர் புனித அந்தோனியார் பக்திப் பாமாலை-1 'தேடினேன் மன நிறைவானேன்' இசைத்தட்டு வெளியீடு 04.05.2013 அன்று Sevran இல் நடைபெற்றது.

● **இளவேனில்**


இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம் ப.மா.சங்கத்தின் 15வது ஆண்டுவிழாவும் இளவேனில் மலர்வெளியீடும் 11.05.2013 ல் பாரிசில் நடைபெற்றது.

● **முப்பெரும் சுற்றுப் போட்டிகள்**

ஈழத்தமிழர் உதைபந்தாட்ட, துடுப்பெடுத்தாட்ட, கரபந்தாட்டச் சம்மேளனங்களின் அனுசரணையுடன் பிரான்ஸ் தமிழர் விளையாட்டுத் துறையினர் நடாத்திய முப்பெரும் சுற்றுப் போட்டிகள் 12.05.2013 அன்று Sevran இல் நடைபெற்றது.

● **சதுரங்கப் போட்டி**

பிரான்ஸ் தமிழர் ஒன்றியத்தின் சதுரங்கப் போட்டி 25.05.2013 அன்று பாரிசில் நடைபெற்றது.




## குதிரை இறைச்சி தொடரும் பிரச்சினை

**மாட்டிறைச்சியில்** குதிரை இறைச்சி கலக்கப்படுவதாக எழுந்த குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து ADN சோதனைகள் பிரான்சில் மேற்கொள்ளப்பட்டன. செய்யப்பட்ட 353 பரிசோதனைகளில் 47 சோதனைகளில் குதிரை இறைச்சி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 13 வீதமான மாட்டிறைச்சி உணவுகளில் கலப்படம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பியரீதியான கலப்பட வீதத்தைவிட பிரான்சில் கலப்படவீதம் அதிகமாக இருக்கின்றது. குதிரை இறைச்சியில் இருக்கும் சில வஸ்துகள் மானிட சமுதாயத்திற்கு ஏற்றதாக இல்லை என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

குதிரை இறைச்சி மனித உணவில் சேர்ப்பதற்கு பிரான்சில் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும் பெரிய உலக நிறுவனங்களின் அத்துமீறல்களை பிரான்ஸ் அரசு கையாள்வதில் நிறைந்த சிக்கல்களை எதிர்கொள்ளநேரிடும். புள்ளிவிபரங்களின்படி பிரான்சில் மாட்டிறைச்சி உண்பவர்களில் பத்தில் ஒரு பங்கினர் மாட்டிறைச்சி உண்பதைக் கைவிட்டுள்ளனர்.


**சங்கீதா அச்சகம்**
01 44 72 08 94


● **அரங்கப் பட்டறை**

**தமிழர் கலாச்சார ஒன்றியம், தமிழ் அரங்கு இணைந்து நடாத்தும் அரங்கப் பட்டறை 07.07.2013 தொடக்கம் 21.07.2013 வரை பாரிசில் நடைபெறவுள்ளது.**

**மேலதிக விபரங்களுக்கு :**
06 17 73 11 92 / 06 11 72 84 25


**அன்பின் குரல்**
www.anbinkural.com
ஞாயிறு திரு வழிபாடு
(வானொலி நிகழ்ச்சி)
மறைக்கல்வி, திருவிவிலியம்,
திருச்சபையின் செய்திகள்
இணைந்து பயன் பெறுங்கள்!


## அதிக காலம் வாழும் பிரெஞ்சுக்காரர்!



ஐரோப்பிய நாடுகளில் ஒரு மனிதனின் சராசரி வயது 65 ஆக கணிக்கப்படுகிறது. ஆனாலும் இந்த சராசரி வயதிற்கும் கூடுதலாக பிரெஞ்சு மக்கள் வாழ்வர் என்று அண்மையில் வெளியான கணிப்பு (Inserm) தெரிவித்துள்ளது.

ஆனாலும், பிரான்சில் 65 வயதைக் கடந்த ஆண்கள் சராசரியாக மேலும் 19 ஆண்டுகள் வாழ்வர். பெண்கள் மேலும் 24 ஆண்டுகள் சரா சரியாக வாழ்வர்.

ஆனால் பிரான்சில் உள்ள வயதான பெண்களின் தேக ஆரோக்கியம் மற்றைய ஐரோப்பிய நாடுகளில் உள்ள பெண்களின் தேக ஆரோக்கியத்தைவிட குறைவாகவே இருக்கும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# பிரான்சின் சொத்து வெளியில் செல்ல அனுமதிக்க முடியாது!

– உற்பத்தித்துறை அமைச்சர்

**2005**இல் இரண்டு பிரான்ஸ் இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்ட வீடியோ பகிர்வு இணையம்தான் Dailymotion. இன்று வளர்ந்து அமெரிக்க வீடியோ பகிர்வு நிறுவனமான YouTube க்கு போட்டியாக சேவையை வழங்கி வருகின்றது. 16 உலக மொழிகளில் ஒரு மாதத்திற்கு 25 மில்லியாட் வீடியோப் பார்வையாளர்களுடன், உலக அளவில் அதிக அளவு பார்வையிடப்படும் தளங்களில் 36வது இடத்தைத் தக்க வைத்துள்ளது. Dailymotion இன் தற்போதைய மதிப்பீடு 300 மில்லியன் டொலர்களாகும். ஜனவரி 2013 முதல் France Telecom பிரதான முதலீட்டாளராக செயற்பட்டு வருகிறது. இதில் அரசு 27 சதவீத பங்குதாரராக இருப்பினும் You Tube உடன் ஒப்பிடும் போது செல்ல வேண்டிய பாதை இன்னும் வெகு தூரம் உள்ளது. இந் நிலையில் அமெரிக்க நிறுவனமான Yahoo 75 சதவீத உரிமத்தை விலை கொடுத்து வாங்க France Telecom உடன் பேரம் பேசியது. இந்த விற்பனையையே உற்பத்தித் துறை அமைச்சர் தடுத்து நிறுத்தியுள்ளார். உலக அளவில் பிரபல்யமாக முதலாவது இடத்திற்கு வரவேண்டுமானால் நிச்சயமாக அந்நிய முதலீடு தேவை. Yahoo போன்ற பாரிய நிறுவனங்களாலேயே அதன் வளர்ச்சியை துரிதப்படுத்த முடியும். 2006 இல் Google நிறுவனம் You Tube ஐ வாங்கிய பின்னரே அதன் வளர்ச்சிச் சிகரத்தைத் தொட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு இது எங்களின் கிளை நிறுவனம் இதை வாங்கவும் விற்கவும் எங்களுக்கு அதிகாரமுண்டு. இதில் எப்படி அரசு தலையிட முடியும் என France Telecom தெரிவித்துள்ளது. உலக மயமாக்கலுக்கான எதிர்ப்பு ‘Made in France’ போன்ற சொல்லாடல்களால் இத்தகைய ஒரு நல்ல வாய்ப்பை Dailymotion இழக்க அமைச்சர் ஆவன செய்துவிட்டார் என டிஜிட்டல் பொருளாதாரத்துறை அமைச்சர் Fleur Pellerin கருத்துத் தெரிவித்துள்ளார்.

# அரச நிதி ஆதரவுடன் வேலைவாய்ப்பு!



வேலையற்றோர் தொகை பிரான்சின் சரித்திரத்தில் இல்லாத அளவு உயர்ந்துள்ளது. 2008ம் ஆண்டில் இருந்து தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் வேலை இல்லாதோர் தொகை ஏறுமுகமாகவே உள்ளது.


2008ம் ஆண்டு ஆரம்பத்தில் 20 இலட்சமாக இருந்த வேலையற்றோர் தொகை 2013இல் 32 இலட்சமாக உயர்ந்துள்ளது. பகுதி நேரமாக வேலை செய்வோருள் பலர் வேலை தேடும் அலுவலகத்தில் பதிந்து மேலதிக வேலை தேடுகின்றனர். இவர்களுடைய எண்ணிக்கையையும் சேர்த்தால் வேலையற்றோர் தொகை 5 மில்லியனையும் தாண்டிச் செல்லும்!

இரண்டாவதாக ‘தலைமுறை ஒப்பந்தம்‘ (Contrat de génération) என்று அழைக்கப்படும், 26 வயதிற்குட்பட்டவர்களிற்கும் 57 வயதிற்கு மேற்பட்டவர்களிற்கும் ஐந்து இலட்சம் (500000) வேலைவாய்ப்புக்கள் அரச நிதி ஆதரவுடன் ஏற்படுத்தப்படவுள்ளன.

பங்குனி 2013 இல் மாத்திரம் 36 900 பேர் வேலை இழந்துள்ளனர். மேற்குறித்த திட்டங்கள் சரியான முறையில் நடைமுறைக்கு வருமானால் ஏறிச்செல்லும் வேலை இழப்போர் தொகை கட்டுக்குள் கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

வேலைவாய்ப்பு பிரச்சினையை குறைக்கு முகமாக அரசு இரண்டு முக்கிய திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது.

முதலாவதாக 26 வயதிற்கு குறைந்த, தகமைகள் ஏதும் பெறாத இளைஞர்கள் ஒரு இலட்சம் பேருக்கு வேலை ஒப்பந்த உதவியுடன் வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட உள்ளது.






## Paris Cola

பிரான்சின் வெவ்வேறு மாகாணங்களில் அம் மாகாணத் திற்கான பிரத்தியேக Cola க்கள் வெளியாகி அப் பகுதிகளில் சக்கை போடு போட்டது. இதில் Bretagne பகுதி வெளியீடான Breizh cola, Corse பகுதி Corsica Cola போன்றவை பிரபலம். இதன் நீட்சியாக பாரிஸ் மாநகரமும் தனது Cola வை வெளியிடவுள்ளது. அதுவும் போட்டியாக இரு வெவ்வேறு நிறுவனங்கள் Paris Cola, Parisgo Cola ஆகிய பெயர்களில் வெளியாகின்றன.


**புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி**

பழைய மாணவர் சங்கத்தின்

போரினால் சிதைவடைந்த வன்னி புதுக்குடியிருப்பு

மாணவர்களின் கல்விமேம்பாட்டிற்கான

**அதிஸ்டலாபச்சீட்டு 29. 06. 2013**

பாரிஸ் 14–15 தமிழ்ச்சோலையின்

இல்ல விளையாட்டுப்போட்டி

**29.06.2013**

3, Av. Maurice d’Ocagne
75014 Paris
M°: Pte de Vanves /Tram : Didot (T3)

# துயர்பகிர்வு

அமரர்
**சபாபதி சபாரத்தினம்**
(காரைநகர்)
தோற்றம் : 06.11.1945
மறைவு : 21.03.2013



அமரர்
**வீரசிங்கம் பரமேஸ்வரன்**
(புங்குடுதீவு)
தோற்றம் : 08.08.1959
மறைவு : 24.03.2013



அமரர்
**பரராஜசிங்கம் சர்மிலன்**
(நுணாவில்)
தோற்றம் : 28.09.1977
மறைவு : 29.03.2013



அமரர்
**கனகசுந்தரம் மோகனதாஸ்**
(காரைநகர்)
தோற்றம் : 24.05.1962
மறைவு : 29.03.2013



அமரர்
**ஞானப்பூ அரசரட்ணம்**
(யாழ்ப்பாணம்)
தோற்றம் : 20.11.1922
மறைவு : 30.03.2013



அமரர்
**வைத்திலிங்கம் சந்திரசேகரம்**
(அளவெட்டி)
தோற்றம் : 16.10.1946
மறைவு : 01.04.2013



அமரர்
**வேலாயுதபிள்ளை சிறீஸ்காந்தராஜா**
(அல்லைப்பிட்டி)
தோற்றம் : 19.01.1955
மறைவு : 09.04.2013




அமரர்
**சதாசிவம் பொன்னம்மா**
(வதிரி)
தோற்றம் : 10.03.1928
மறைவு : 14.04.2013



அமரர்
**இராமலிங்கம் சிவரத்தினம்**
(வயாவிளான்)
தோற்றம் : 05.05.1940
மறைவு : 25.04.2013



அமரர்
**சண்முகநாதன் மனோகரன்**
(புங்குடுதீவு)
தோற்றம் : 22.12.1967
மறைவு : 01.05.2013



# நிலா குறுக்கெழுத்துப் போட்டி - 05

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | 5 | | 6 |
| | | | ■ | | | ■ | |
| | | | 7 | 8 | | | |
| | | | | | ■ | 9 | 10 |
| | ■ | ■ | | 11 | | | |
| 12 | 13 | | | | ■ | | |
| 14 | | | 15 | | | | |
| | | 16 | | | | | ■ |

**மேலிருந்து கீழ்**

*1. பச்சைஅரிசி, வெல்லம், நெய் கலந்து எண்ணெயில் சுடப்படும் திருவிழாப் பலகாரம் (5)*
*2. கண்களை மட்டுமல்ல மனதையும் மூடி அமர்ந்திருத்தலே .... ஆகும் என்கிறது ஆன்மீகம் (4)*
*3. 'ரோஜா'வில் சின்ன சின்ன ஆசை பாடியவர்(4)*
*4. நாள்தோறும், அல்லது .... செய்தித் தாள்கள் (4)*
*5. தேர் (3)*
*6. சோக உணர்வினைத் தரும் இராகம் (3)*
*7. இந்திய இராணுவம் இலங்கையில் .... ஆக உள்நுழைந்தது (6)*
*8. பெற்றோர் சொத்தில் பெண்களுக்கும் .... வழங்க வேண்டும் என்பது சட்டம் (4)*
*9. மகாபாரதம் ஒரு .... ஆகும் (5)*
*10. தமிழ் நாட்டில் உணவகங்களை சைவ உணவகம் மற்றும் .... உணவகம் என வரையறுக்கின்றார்கள் (4) (குழம்பியுள்ளது)*
*12. ஊறவைத்த நெல்லை காயவைத்து வறுத்து இடித்துப் பெறும் உணவுப் பண்டம் (3)*
*13. பழங்கால வீடுகளின் நுழைவாயிலின் பக்கவாட்டில் படுப்பதற்கு ஏற்ற வகையில் கட்டப்பட்டிருக்கும் சற்று உயரமான மேடை (3)*

**இடமிருந்து வலம்**

*1. கணவன் (7)*
*8. இல்லறவாசி அல்லது குடியானவன்(4)*
*9. இளையராஜா .... அமைப்பாளர் (2)*
*11. மகாகவி சுப்பிரமணிய .... (3)*
*12. திருப்தி எதிர்ச்சொல் (5)*
*14. வண்ணார் பண்ணை ... (3)*
*15. பழத்தைப் பிழிந்து எடுக்கும் சாறு(5)*
*16. தரையில் உள்ள குப்பைகளை கூட்ட துப்பரவு செய்ய உதவும் விளக்குமாறு (5)*

✔ உங்கள் பதில்களை 10 யூலை 2013 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்
✔ சரியான பதில்கள் எழுதியவர்களில் மூவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

● போட்டி இல.4 ல் பரிசு பெறுபவர்கள்.
1. திருமதி.மனோகரி
(55, Rue Felix Faure, 95880 Enghien les Bains)
2. திருமதி. தர்மலிங்கம் (17, Bis Rue Curial, 75019 Paris)
3. திருமதி. அருள்வேந்தன் சௌதினி
(52, Rue du Ruisseau, 75018 Paris)
● பரிசில்களை சங்கீதா அச்சகத்தில் நேரில்வந்து நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்!


● சரியான விடை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்
● சரியான விடையை அனுப்பியவர்களின் முழு விபரங்களையும் www.nilafrance.com இல் பார்க்க முடியும்.

● **அனுப்ப வேண்டிய முகவரி** ●
**NILA,** 39, Bd. de la Chapelle - 75010 PARIS



# ஐரோப்பா எப்படி வந்தது?

*50 நாடுகளை உள்ளடக்கிய நிலப்பரப்பே ஐரோப்பா (Europe) என விழிக்கப்படுகிறது.*



பண்டைய நிலப்பரப்புக்களில் ஒன்றான பேனிசியா (Phenicie) தற்போதைய லெபனான் மற்றும் சிரியா நாடுகள் அமைந்துள்ள பகுதி. இந் நிலப்பரப்பின் அரசனான Agenor இன் மகளின் பெயரே Europe ஆகும். இவ் இளவரசியின் பெயரே உலக நிலப்பரப்பின் இரண்டாவது சிறிய கண்டத்திற்கு சூட்டப்பட்டுள்ளது.

இவரின் உருவப் படத்தை புதிய 5 யூரோ நோட்டுக்களிலும் , 2 யூரோ 'கிரேக்க' குத்திகளிலும் காண முடியும்.

அமரர்
**இளையவி செல்லத்துரை**
(சங்கானை)
தோற்றம் : 02.05.1930
மறைவு : 09.05.2013



அமரர்
**கந்தையா நல்லையா**
(இணுவில்)
தோற்றம் : 16.08.1926
மறைவு : 06.05.2013



அமரர்
**சதாசிவம் சுந்தரலிங்கம்**
(வேலணை)
தோற்றம் : 19.01.1950
மறைவு : 14.05.2013



அமரர்
**தவராசா பவுண்ராஜ்**
(யாழ்ப்பாணம்)
தோற்றம் : 20.02.1984
மறைவு : 14.05.2013






# 500 யூரோ தாள்கள் முடக்கப்படுமா?

**பு**ழக்கத்திலுள்ள யூரோ நோட்டுக்களின் பெறுமதியில் மூன்றில் ஒரு பகுதி, 500 யூரோ நோட்டுக்களைக் கொண்டுள்ளன. இது அண்ணளவாக 300 மில்லியாட் யூரோக்களாகும். அதிகம் பாவனையில் இல்லாத அதாவது மூன்றில் இரண்டு பகுதி உபயோகத்தில் இல்லாத நிலையில் வங்கிகளில் முடக்கத்திலேயே இத்தாள்கள் உள்ளன. ஐரோப்பியர்களில் ஐம்பது சத வீதத்திற்கு அதிகமானோர் 500 யூரோ தாள்களை இதுவரை தங்கள் கைகளால் தொட்டதேயில்லை என்கின்றனர். பிரான்சைப் பொறுத்தவரை Banque de France இது வரை ஒரு முறையேனும் 500 யூரோக்களை வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. 500 யூரோ தாள்கள் ஒழிப்பின் மூலம் வரிவிதிப்புக்களிலிருந்து தப்பும் கறுப்புப் பணப் பதுக்கல்களை குறைக்க வழிவகுக்கும் என அரசு நம்புகிறது. இங்கிலாந்தில் 2010 முதல் பணமாற்று நிலையங்கள் 500 யூரோ நோட்டுக்கள் ஏற்பதை நிறுத்திவிட்டதோடு 90 சதவீத 500 யூரோ தாள்கள் குற்றசார் தொழில் புரிபவர்களாலேயே உபயோகப்படுத்தப்படுவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளன.

500 யூரோ நோட்டுக்கள் புழக்கத்திலிருந்து நீக்கப்படும் பட்சத்தில் எவ்வாறான முறைமை கையாளலாம் என பொருளாதார ஆய்வாளர்கள் ஐரோப்பிய மத்திய வங்கி பலன் பெறும் வகையிலான ஒரு மாதிரித் திட்டத்தை வெளியிட்டுள்ளனர்.

அதாவது 500 யூரோத்தாள்கள் ஒரு மாத காலத்திற்குள் வங்கிகளில் மாற்ற வேண்டும். 10 000 யூரோவிற்கு அதிகமான தொகையாயின் சரியான ஆதாரங்கள் காட்டப்பட வேண்டும். இக் காலதாமதங்களுக்குப் பின் வெளியில் இருக்கும் தாள்கள் அனைத்தும் ஐரோப்பிய மத்திய வங்கியின் வருவாயாகக் கணிக்க முடியும் எனத் தெரிவித்துள்ளனர்.

பிரான்ஸ்தான் 500 யூரோ தாள் நீக்கத்தைப் பரிந்துரை செய்துள்ளது எனினும் முடிவுகள் இன்னமும் எட்டப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நீங்கள் ஒரு ‘கசியரா’ ? அவதானமாக இருங்கள்?

உங்களுக்கு இதய சம்பந்தமான நோய்கள் மற்றும் நிரிழிவு என்பன வருவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் என பீதியைக் கிளப்புகிறது சுகாதார பாதுகாப்பு மையம். நீங்கள் அதிகமாக பாவிக்கும் ‘Ticket de caisse’ தாள்களில் பொதிந்திருக்கும் Bisphénol என்னும் இரசயான பொருள்மூலமாகவே இத்தாக்கம்



ஏற்படுவதாக கருதப்படுகிறது. மை இல்லாது பிரின்ற் செய்வதற்காக இவ் இரசாயன பொருள் பாவிக்கப்படுகிறது. நீங்கள் தொடர்ந்து இத்தாள்களுடன் தொடுகையில் இருப்பதால் இவ் இரசாயனப்பொருள் தோல்மூலமாக உடலினுள் உட்புகுந்து ஊறுகளை விளைவிக்கின்றது. இதை முற்றாகத் தடைசெய்ய சுகாதார பாதுகாப்பு மையம் பரிந்துரை செய்துள்ளது.

நீண்ட காலமாக குழந்தைகளுக்கான பாற்போத்தல் தயாரிப்பில் பயன்படுத்தப்பட்ட இவ் இரசாயனப்பொருள் கடந்த ஜனவரிமுதல் தடைசெய்யப்பட்டு தயாரிப்புக் கலவையிலிருந்து முற்றாக நீக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.




**பிரான்சின் நெடுஞ்சாலை** வேகவரம்பு குறைக்கப்படவுள்ளது.

மது, போதைப் பொருள் மற்றும் அதிவேகம் போன்றவையே பிரான்சின் நெடுஞ்சாலை விபத்துக்களுக்கான காரணிகளாக அறியப்படுகின்றன.

நெடுஞ்சாலையில் வேகவரம்பு குறைப்பு மூலம் குறிப்பிட்ட அளவு விபத்து மரணங்களைக் குறைக்க முடியும். ஒரு சத வீத வேகக் குறைப்பு மூலம் நான்கு சத வீத விபத்துக்களை குறைக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிரான்ஸ் நெடுஞ்சாலைகளில் அதி கூடிய வேகமாக வரையறுக்கப்பட்டுள்ள 130Km / h ஐ 120Km /h ஆக குறைக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. ஐரோப்பாவைப் பொறுத்தவரை 60 சத வீதத்திற்கும் அதிகமான நாடுகளில் 120 Km/ h வேகமே உபயோகத்தில் உள்ளது. வேகக் குறைப்பு, சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கும் நன்மையாக அமையும். 110Km / h குறைவான வேகத்தைக் கையாளுவதன் மூலம் வாகனம் குறைவான அளவு எரி பொருளையே நுகரும். இதன் மூலம் வெளியாகும் சூழல் மாசு வாயுக்களின் அளவு குறைவாக இருக்கும் எனவும் நெடுஞ்சாலை வாகனப் போக்குவரத்து பாதுகாப்பு மையம் கருத்துத்தெரிவித்துள்ளது.

# 150வது வருட நிறைவை கொண்டாடும் செய்தித் தாள் விற்பனை அங்காடிகள்




பாரிஸ் நகரின் பொது இடங்களில் செய்தித்தாள் விற்பனை அங்காடிகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள். பிரான்ஸ் பாரம்பரியத்தோடும், வரலாற்றோடும் ஒன்றிவிட்ட இச் செய்தித்தாள் விற்பனை அங்காடிகள் தங்கள் 150வது வருட நிறைவைக் கொண்டாடுகின்றன. பிரான்சை அடையாளப்படுத்துவதில் ஈபிள் கோபுரம் மட்டுமல்ல இச் செய்தித் தாள் விற்பனை அங்காடிகளும் (Les Kiosques de Journaux) முக்கிய இடத்தை வகிக்கின்றன.

ஊடக மற்றும் எழுத்துத் துறையின் பொற்காலம் என வர்ணிக்கப்படும் 1857 ல் முதலாவது அங்காடி பாரிசில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் சாதாரண மேசையில் செய்தித்தாள்களை அடுக்கி வைத்து விற்பனை செய்யப்பட்டது. இது பாரிஸ் நகரின் அழகைக் குறைக்கும் விற்பனை முறை என்று மக்களால் குற்றம் சாட்டப்பட, இவ் அங்காடிகள் பிரத்தியேக புதுவடிவம் பெற்றன.

பத்திரிகைத் துறை பல சரிவுகளைச் சந்தித்தபோதும், இன்டர்நெட் செய்திப்புரட்சிகளால் செய்தித்தாள் விற்பனைகள் வீழ்ச்சியைக் கண்டபோதிலும், இவ் அங்காடிகள் தொடர்ந்தும் நிலைத்து நிற்கின்றன. பாரிசில் 340 செய்தித்தாள் விற்பனை அங்காடிகள் இயங்கி வருகின்றன. 88 சதவீதமான பாரிஸ் மக்கள் இவை தங்கள் நாளாந்த வாழ்கையோடு ஒன்றிவிட்டதாக கருதி மகிழ்கின்றனர்.

---


Christian Nayet

## அம்புலன்ஸ் ஒட்டுனரின் உயிர் காத்த நோயாளி!

Christian Nayet வயது 60. வயிற்றுப்புற்றுநோய் நோயாளி. வைத்தியசாலையில் ஸ்கான் பரிசோதனை செய்வதற்காக வீட்டிலிருந்து சென்றுள்ளார். இவரை வீட்டிலிருந்து கூட்டிச் செல்ல வந்த அம்புலன்ஸ் ஒட்டுனருக்கு வைத்தியசாலைக்குச் செல்லும் வழியில் மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. ஒரு நிமிடமும் தாமதிக்காத நோயாளி Christian Nayet ஒட்டுனருக்கு ஆரம்ப முதலு–தவிகளைச் செய்து படுக்க வைத்து தானே அம்புலன்சை ஓட்டி அருகாமையிலிருந்த வைத்திய சாலைக்குக் கூட்டிச் சென்றுள்ளார். வைத்தியசாலையில் அடுத்த பத்து நிமிடங்களில் அறுவைச் சிகிச்சை மேற்கொண்டு ஒட்டுனரின் உயிரைக் காப்பாற்றியுள்ளனர். Lens ல் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இச் சம்பவத்தை தொடர்ந்து Christian கதாநாயகனாக பலராலும் பாராட்டப்பட்டுள்ளார்.

### தவறு செய்வது மனித இயல்பு

நாம் ஒரு தவறைச் செய்யும்போது

- **அதை நியாயப்படுத்தக்கூடாது.**
- **அதை மறுக்கக்கூடாது.**
- **பிறரைக் குற்றம் சாட்டக்கூடாது.**
- **அதை மீண்டும் செய்யக்கூடாது.**

பிறகு என்னதான் செய்யவேண்டும்?

- **ஒப்புக்கொள்ளுங்கள்!**
- **மன்னிப்புக் கேளுங்கள்!!**
- **கற்றுக்கொள்ளுங்கள்!!!**

**IMPRIMERIE - PHOTOCOPIE**

லாச்சப்பலில்

**சங்கீதா அச்சகம்**




39, Bd de la Chapelle - 75010 PARIS Tél. : 01 44 72 08 94

# பாரிஸ் நகரை ஆடுகள் மேயப்போகின்றன...



**பாரிஸ் நகரில்** ஆங்காங்கே காணப்படும் பசும்புல் தரைகளில் ஆடுகள் மேய்வதைக் கண்டால் ஆச்சரியப்படாதீர்கள். இதுவரை பிரான்சின் கிராமப்புறங்களிலும் பண்ணைகளிலும் நீங்கள் கண்டிருக்கக்கூடிய ஆடுகளை இனிவரும் காலங்களில் நீங்கள் பாரிஸ் நகரிலும் சாதாரணமாகக் காணலாம்.

பாரிஸ் நகரில் புற்கள் வளர்ந்த பகுதிகளில் புல் வெட்டும் இயந்திரங்களை உபயோகிப்பதற்குப் பதிலாக ஆட்டுக் குட்டிகளை மேயவிடவுள்ளது பாரிஸ் மாநகர சபை. இதன் மூலம் எரிபொருள் பாவனையைக் குறைக்க முடியுமெனவும் சூழல் மாசடைவைத் தவிர்க்க முடியுமெனவும் மாநகர சபை நிர்வாகம் தெரிவிக்கிறது. இப் பரீட்சார்த்த முறைக்கு முதற்கட்டமாக நான்கு சிறியரக ஆட்டுக்குட்டிகள் தலா 280 யூரோக்கள் விகிதம் வாங்கப்பட்டுள்ளன. இம்முயற்சி வெற்றிதரும் பட்சத்தில் இன்னும் அதிகமான ஆட்டுக் குட்டிகளை வாங்கி வளர்க்க மாநகரசபை திட்டமிட்டுள்ளது.

## பிள்ளை பார்க்கிற விளையாட்டு இனி பள்ளிகளில் சரிவராதோ..!


மாலை வேளைகளில் பாடசாலை விட்டு பிள்ளைகளை எடுப்பதற்கு பல பெற்றோர் நேரத்திற்கு வருவதில்லை என்ற குற்றச்சாட்டு பாடசாலை நிர்வாகங்களினால் அடிக்கடி முன்வைக்கப்படுவதுண்டு. ஆனாலும் எதுவித முன்னேற்றமும் காணாததால் சலித்துப்போன Bourogne நகரசபை நிர்வாகம் இப்போது தண்டம் விதிக்க முன்வந்துள்ளது.

பிரான்சின் கிழக்குப்பகுதியில் அமைந்துள்ள Bourogne நகரசபை நிர்வாகமே இவ் அபராத விதிப்புக்கு முன்வந்துள்ளது. தாமதமாக வரும் பெற்றோருக்கு 15 நிமிடத்திற்கு 5யூரோ தண்டம் அறவிடப்படும் என நகரசபை அறிவித்துள்ளது.




ஆனாலும், பெற்றோர் அமைப்புக்கள் இது மிகைப்படுத்தப்பட்ட நடவடிக்கை என கண்டனம் தெரிவித்துள்ளன.

## ஸ்மாட்போன்




கைத்தொலைபேசி நம்மையறியாமலே ஆறாவது விரலாக நம்மில் உருமாறிக்கொண்டிருக்கிறது. வானிலை அறிக்கை, செய்திகள், பாடல்கள், விளையாட்டு, சமையல் குறிப்பு என நமது விரலசைவில் வேகமாக உலகம் உருண்டோடிக்கொண்டிருக்கிறது. இந்த ஸ்மாட்போன் பாவனையில் தகவல் பரிமாற்ற மின்னஞ்சல் பாவனையும் முக்கிய இடத்தைப்பிடிக்கிறது.

**அதிகமான மின்னஞ்சல்கள் படுக்கையறையிலிருந்தும், கழிவுக்கூடங்களிலுமிருந்தே அனுப்பப்படுகின்றன என ஆய்வறிக்கை ஒன்று தகவல் தருகிறது.** இணைய மூலமான பெருட்கொள்வனவுகள் அதிகமாக அலுவலகங்களிலிருந்தே மேற்கொள்ளப்படுவதாக இவ் ஆய்வறிக்கை மேலும் தெரிவிக்கிறது..




## 66 வது கான் திரைப்படவிழா

பிரபல ஹொலிவுட் இயக்குனர் Steven Spielberg தலைமையில் மே 15 முதல் 26 வரை நடைபெறுகிறது. 9 பேர் கொண்ட நடுவர் குழுவில் இந்தியாவைச்சேர்ந்த நடிகை வித்தியா பாலனும் அடங்குகிறார். இவர் நடிகை சிலக் சுமிதா வாழ்க்கை வரலாற்றுப்படமான Dirty Pictures ல் நடித்தமைக்காக இந்திய தேசிய விருதுபெற்றவர். திரைப்படவிழாவில் பங்கேற்கும் 20படங்களில் ஒரே ஒரு பெண் இயக்குனரின் படம் மட்டுமே தேர்வாகியுள்ளது. இவர் பிரான்சைச்சேர்ந்த Valeria Bruni Tedeschi ஆவர்





வித்தியா பாலன்

ரூபி அச்சகம்

போட்டோ கொப்பி மற்றும் அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும் நாடுங்கள்!

10, Rue Labat - 75018 Paris
Métro : Marcadet Poissonniers

# EXACT EXCHANGE SARL

## BUREAU DE CHANGE

Excellent Taux - Excellent Rate







தங்கநாணயங்களை
குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ளநாடுங்கள்!

123, Bld. de Magenta -75010 Paris
M°: Gare du Nord

Ouvert tous les jours

MoneyGram
International Money Transfer

Tél./Fax: 01 48 78 35 33
E-mail: exactexchange@hotmail.fr

# Gooday

## Centre de Beauté



- மணப்பெண் அலங்காரம்,
- மருதாணி அலங்காரம்,
- நக அலங்காரம்,
- கண்புருவம் வடிவமைத்தல்,
- பேசியல்,
- தலைக்கான ஓயில் மசாஜ் போன்ற அனைத்து அழகுசேர் வேலைகளிற்கும்



**Tél.: 01 42 05 78 67**

மணப்பெண் அலங்காரம்
உங்கள் இல்லங்களுக்கு வந்தும்
செய்துதரப்படும்

208 Bis, Rue du Fbg St-Denis, 75010 Paris

# M.G.A. Coiffure




Tél.: 06 66 66 06 13

20, Rue Roger Salengro - 93700 Drancy

# Rapid Emballages

Fourniture d'emballage et d'entretien pour l'alimentation,
la boucherie, la boulangerie et la restauration

உங்கள் வர்த்தக ஸ்தாபனங்களுக்குத் தேவையான
பிளாஸ்டிக் பைகள், மற்றும் சிறியவகை பெட்டிகளை
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : திரு. விமல்

e-mail :
vimalvasanthy@hotmail.fr

Tél. : 01 58 34 04 22

Port : 06 16 81 22 00 - 06 66 79 56 89 - 01 39 83 68 81

1 bis rue de chemin vert, 93800 Epinay sur Seine



• Gold
• Diamond
• Platinum
26 வது ஆண்டில்...
மோகன் ஜுவலரி மார்ட்
உங்களுக்காக காத்திருக்கிறது
புத்தம் புதிய கார்!
வாடிக்கையாளர்களுக்கு
என்றென்றும் எங்கள்
மனம் நிறைந்த நன்றிகள்!
MJm
Since 1987
Tél.: 01 42 05 65 26 - Fax : 09 50 31 01 82
201, rue du Fg. St. Denis - 75010 Paris (M°: La Chapelle / Gare du Nord)
E-mail : mohanjm@hotmail.fr




BABY பேபி பலூன்
Balloon Decoration டெக்கரேஷன்
• கேக்
• மணவறை
• வீடியோ
• போட்டோ
• உணவுகள்
• மண்டப ஒழுங்குகள்
மற்றும் உங்கள்
விழாக்களுக்கான
அனைத்து
ஒழுங்குகளுக்கும்
Port : 06 13 06 20 29 / Tél : 01 39 80 85 23

# பாரிசை சுற்றி அமைந்துள்ள பெரிபெரிக்சாலை ஆரம்பிக்கப்பட்டு 40 வருடங்கள் பூர்த்தியாகின்றன




1956ல் ஆரம்பிக்கப்பட்டு 17 வருட கட்டுமானங்களுக்குப் பின் 1973ல் திறந்து வைக்கப்பட்டது. அக்காலத்தில் 2 மில்லியாட் பிராங்குகள் இத் திட்டத்திற்காக செலவிடப்பட்டது. நாளொன்றிற்கு 1,1 மில்லியன் வாகனங்கள் இப் பாதையைப் பாவனைக்கு உட்படுத்துகின்றன. ஐரோப்பாவைப் பொறுத்தவரை பாரிசைச் சுற்றி அமைந்துள்ள இப் பாதையே அதிக அளவு வாகனப் போக்குவரத்து கொண்டதாகும்.

அதிகரித்து வரும் வாகனப் போக்குவரத்தால் இச் சாலையை அண்மித்து வாழும் மக்கள் இரு வகையான முக்கிய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

1. அதிகளவு வாகனச் சத்தம் 75 டெசிபாலாகக் கணிக்கப்படுகின்றது. அதாவது ஒரு அஸ்பிரேட்டர் உங்களுக்கு அருகாமையில் தொடர்ந்து வேலை செய்து கொண்டிருந்தால் ஏற்படக் கூடிய சத்தம்

2. வாகனப்புகைவெளியேற்றத்தால் ஏற்படும் சூழல் மாசடைவு.

முதலாவது பிரச்சினைக்கு ஒலிஎதிர்ப்பு சுவர்கள் நிறுவப்பட்டது. முதலாவது சுவர் 1983ல் நிறுவப்பட்டது. ஆயினும் இச்சுவர்களால் முழுமையான தீர்வுகள் எட்டப்படவில்லை.

2. சூழல் மாசடைதல் : சூழல் மாசடைவதைத் தடுக்க சாலையின் இரு பக்கங்களிலும் மர வளர்ப்பு, வேகக் கட்டுப்பாடு போன்றவை மாநகர சபையால் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

சிகப்பு விளக்கு நிறுத்தங்கள் எதுவுமில்லாத இவ் 35 Km சுற்றுச்சாலை முற்றிலும் வீடியோ கண்காணிப்பு மூலம் போக்குவரத்து காவல் துறையினரால் கண்காணிக்கப்படுகின்றது.

இக் கண்காணிப்பில் ஓர் சுவையான சம்பவமும் பதிவாகியிருந்தது

Porte de Bagnolet உள்நுழை பாதையில் ஒரு மனிதர் சக்கர நாற்காலியில் அமர்ந்து பிச்சை எடுத்துக்கொண்டிருந்தார். போக்குவரத்துக்கு பெரிதும் இடைஞ்சல் இல்லாத போதும், அம் மனிதருக்கு மிகவும் ஆபத்துவிளைவிக்கக்கூடிய செயலெனக் கருதிய வீடியோ கண்காணிப்பாளர், காவற் துறையினரை அந்த இடத்திற்கு துரிதமாக அனுப்பி வைத்தார். பல வாகனங்களில் விரைந்த காவற் படையினரைக்கண்ட அம் மனிதர் எவ்வித பதட்டமும் இல்லாமல் சக்கர நாற்காலியை மடக்கி தோளில் சுமந்தபடி நடந்து மறைந்தார்.

## இப்படியும் வேலைநிறுத்தம் செய்கிறார்கள் !

பிரான்சில் வேலைநிறுத்தங்களுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் குறைவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த சமாச்சாரம். ஆனால் அண்மையில் நடைபெற்ற லூவர் அருங்காட்சியக பணியாளர்களின் வேலைநிறுத்தம் வேறொரு பரிமாணத்தில் அமைந்திருந்தது. பிக்பொக்கட், கள்ளர் தொல்லை அருங்காட்சியகத்தையும் விட்டுவைக்கவில்லை. பார்வையாளர்களும், உல்லாசப்பயணிகளும் கடும் அசௌகர்யத்தை தினமும் சந்தித்தனர். லூவர் நிர்வாகம் இக் களவைத் தடுப்பதற்கு பலமுயற்சிகள்



எடுத்தும் பலனளிக்காது போகவே, அரசின் பாராமுகத்தை சுட்டிக்காட்ட பணியாளர்கள் இவ்வகையானதொரு வேலைநிறுத்தத்தை மேற்கொண்டனர். இதையடுத்து, காவல்துறையினர் மேற்கொண்ட கடும் நடவடிக்கையில் ஒரே நாளில் மட்டும் 21 திருடர்கள் மாட்டிக்கொண்டனர்.

**துன்பங்கள் நிரந்தரமானவையல்ல அவை பாலத்தின் கீழ் ஓடும் தண்ணீரைப் போல நிலைத்து நிற்காது...**

### ○ மகிழ்ச்சி

மகிழ்ச்சியுள்ள மனிதனுக்கே வாழும் கலை தெரிந்திருக்கிறது. தான் வாழும் சூழலையும் மகிழ்ச்சியானதாக மாற்றக்கூடிய வல்லமை அவனிடம் இருக்கிறது.

**நல்ல நகைச்சுவை நம்மை மருத்துவரிடம் செல்லவிடாமல் பாதுகாக்கிறது.**

சங்கீதா அச்சகம்
01 44 72 08 94



# ஒப்பேரா நடனக் கல்லூரிக்கு வயது 300

**பாரிஸ் ஒப்பேராவின்** நடனக் கல்லூரிக்கு வயது 300. இது சூரிய அரசன் என வர்ணிக்கப்பட்ட பதின்நான்காம் லூயி மன்னனால் 1713ம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அக் கால கட்டத்தில் சிறந்த நடனக் கலைஞன் என வர்ணிக்கப்பட்டவர் பதின்நான்காம் லூயி. உலக அரங்கில் 96 சதவீத பலே நடனக் கலைஞர்கள், இன்று விழுதுகள் ஊன்றி பெரு விருட்சமாக வளர்ந்து நிற்கும் ஒப்பேரா கல்லூரியில் பயின்றவர்களே.

இந்நடனக் கல்லூரியில் 8 வயது முதல் பயிற்சிக்குச் சேர முடியும். கடினமான பயிற்சியின் பின்னர் அதாவது 10 வருட பயிற்சிகளின் பின்னரே உடல் ஒரு நடனகாரருக்குரிய நெளிவு சுழிவுகளைப் பெறுகிறது. ஆழமான அர்ப்பணிப்பு இருந்தால் மட்டுமே அதியுயர் நிலையான நட்சத்திர அந்தஸ்தில் ஜொலிக்க முடியும். கடந்த ஆண்டில் மட்டும் இருபது பேர் தகுதியான நிலையில் இருந்தும் மூன்று பேர் மட்டுமே நட்சத்திர அந்தஸ்தை எட்ட முடிந்தது. அதிகளவு பிரபலமாக 700 மாணவர்களுடன் ரஸ்ய Le Bolshoi திகழ்கிறது. இது 240 வருடப் பழமையும் மிகக் கடினமான பயிற்சிப் பாசறை–களையும் கொண்டது. இருப்பினும் உலக அளவில் பாரிஸ் ஒப்பேரா நடனக் கல்லூரியே முதலிடத்தில் திகழ்கிறது.

பிரபல பலே நடனக் கலைஞரான Rudolf Noureev இக் கல்லூரி வளர்ச்சிக்கு முக்கியமாகக் கருதப்படுபவர். இவரின் மீள் நடன அமைப்பின் உருவாக்கமான பலே Lac des Cygnes (அன்னப் பறவைகளின் ஏரி) மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமானதும் கூட.


தற்போது இக் கல்லூரியை 1995 முதல் பிரான்சின் முன்னாள் நடன நட்சத்திரமும் நடன வடிவமைப்பாளருமான Brigitte Lefévre நிர்வகித்து வருகிறார். 300வது வருட கொண்டாட்டமாக பல நடன நிகழ்ச்சிகள் L'Opera Garnier அரங்கிலும் L'Opera Royal de Versailles அரங்கிலும் நடைபெற்று வருகின்றன.

இவ் அழகான பிரான்ஸ் நாட்டு பாரம்பரியத்துடன் பின்னப்பட்ட பலே நடனங்களை நீங்களும் சென்று பார்த்து ரசிக்க முடியும்.


அல்லையூர் செய்திகளை
தாங்கி வருகிறது!
www.allaipiddy.com


## தந்தை

வரலாற்று நாயகன்போல்
பல வெற்றிகளை
குவித்தவரல்ல
என் தந்தை.
ஆனாலும் எனக்கு
என் தந்தை நாயகன் தான்.
வெற்றி மட்டும்
வாழ்க்கையில்லை
என்று சொன்னவர்
அவர் தானே!




**முன்னாள்** (FMI) நாணய நிதிய தலைவரான DSK இன் Nafissatou Diallo மீதான செக்ஸ் அத்து மீறல்கள் உலகம் அறிந்ததே. அமெரிக்காவில் Sofitel ஹொட்டலில் நடந்த இந் நிகழ்வுக்குப் பின்னர் பிரான்ஸ் அதிபர் தேர்தலில் போட்டியிட தகுதியில் இருந்த DSK, இன்று தொடர் வழக்குகளால், தனது முழுத் தகுதியையும் இழந்து தனிமனிதனாக அடிமட்டத்துக்கு தூக்கி எறியப்பட்டுள்ளார். இம் மனிதரின் வாழ்க்கை திரைப்படமாக வெளியாகவுள்ளது. இத் திரைப் படத்தில் DSK இன் பாத்திரத்தை Gérard Depardieu ஏற்று நடிக்கிறார். அண்மைக் காலத்தில் பிரான்ஸ் அரசின்வரிவிதிப்புகளை எதிர்த்து நாட்டைவிட்டு வெளியேறியவர், நாட்டுரிமையைத் துறந்து கலகம் செய்து பிரபலமானவர் Gérard Depardieu. இத் திரைப்படத்தை பிரபல இயக்குனர் Abel Ferrara இயக்குகிறார். Sofitel ஹொட்டல் பணிப்பெண்ணாக Nafissatou Diallo தனது கதாபாத்திரத்தை ஏற்று நடிக்கவுமுள்ளதாக வதந்திகளும் உலவாமல் இல்லை.



எமது அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# புதிய 5 யூரோ!



**புதிய 5 யூரோ** நோட்டுக்கள் 2 மே முதல் புழக்கத்திற்கு வந்துள்ளன. பெரிய மாற்றங்கள் எதுவும் இல்லாத பொழுதும், பிரான்சுக்கு பெருமை சேர்க்கும் வண்ணம் வெளிவந்துள்ளதாக Banque de France தெரிவித்துள்ளது.

அச்சிடப்படும் 3 மில்லியாட் யூரோக்களில் 1 மில்லியாட்டிற்கு அதிகமானவை பிரான்சின் மத்திய பகுதியில் அமைந்துள்ள Auvergne ல் அச்சிடப்படுகின்றது. ஒரு நோட்டு அச்சிடுவதற்கான செலவு 5 சென்ரீம் யூரோக்களுக்கு குறைவான–தாக கணக்கிடப்பட்டுள்ளது. ஐரோப்பாவின் வேறு நாடுகளுடன் ஒப்பிடும் போது இது மிகக் குறைவான செலவாகும். தொடர்ந்து எல்லாவித யூரோ நோட்டுக்களிலும் 2016 ற்குள் மாற்றங்கள் கொண்டு வரப்படவுள்ளன. தற்போது வெளியாகியுள்ள இந் நோட்டுக்களில் கள்ள நோட்டுக்கள் வெளி வருவதற்கான சாத்தியக் கூறுகள் மிகக் குறைவானதாகவே கருதப்படுகிறது. நோட்டுக்களின் ஓரங்களில் பிரத்தியேகமாக கண் தெரியாதவர்கள் விரல்களால் தொட்டு உணரும் வகையான கோடுகள் அச்சிடப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர்கள் நோட்டுக்களை வேறுபடுத்தி அடையாளப்படுத்தவும் முடியும்.

முதற் கட்டமாக வெளியாகியுள்ள நோட்டுக்களுக்கு ‘ஐரோப்பா’ எனப் பெயர் சூட்டியுள்ளனர். ‘Europe’ கிரேக்க தொன்மவியலில் (Mythologie grecque) பேனிசியா (Phénicie) நிலப்பரப்பின் இளவரசியின் பெயராகும். இவரின் பெயரே ஐரோப்பியா கண்டத்திற்கு சூட்டப்பட்டது. அவரைப் பெருமைப்படுத்தும் விதத்தில் அவரது முக உருவம் அச்சிடப்பட்டுள்ளது. இவ் வருட இறுதிக்குள் பழைய 5 யூரோ நோட்டுக்கள் அனைத்தும் புழக்கத்தில் இருந்து நீக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## பிரான்சில் ஐவருக்கு ஒருவர் நாளாந்தம் ஆறு மணி நேரங்களுக்கு குறைவான தூக்கத்தையே கொண்டுள்ளனர்.

தூக்கமின்மையானது உடற்சோர்வு, மந்தமான அரைத்தூக்க நிலை போன்றவற்றைத் தோற்றுவிப்பதோடு

– நீரிழிவு நோய் ஊக்குவிப்பு,
– உடல் வளர்ச்சிக் குறைவு,
– உடல் பருமன்
– இதயத்திற்கான இரத்த ஓட்டம்
– முதுமை மற்றும் மன அழுத்தம்

போன்றவற்றைக் கட்டுப்பாடு செய்யும் மரபணுக்கள் மீது அதிக தாக்கங்களையும் செலுத்துகின்றது.



# அரச செலவினங்கள்

## முதல் பெண்மணி மீது

## திரும்பும் பார்வைகள்!

பிரான்சுவா ஹொலந் அரசின் முன்னாள் நிதியமைச்சர் Jerome Cahuzac இன் வருமான வரிக் குழறுபடிகள் மற்றும் சுவிஸ் வங்கியில் பதுக்கப்பட்ட பணம் போன்ற பிரச்சினைகள் விசாரணைக்கு வந்ததைத் தொடர்ந்து அதிபர் தனது அமைச்சர்களிடம் சொத்து விபரத்தை பொது வெளியில் வைக்கக் கோரியிருந்தார். தொடர்ந்து அமைச்சர்களும் பிரான்சுவா ஹொலந் தவிர்த்து சொத்து விபரங்களை வெளியிட்டிருந்தனர். அதிபர் தேர்தலின் போது தனது சொத்து விபரங்களை பொது வெளியில் வெளியிட்டிருந்த காரணத்தால் அவர் மீண்டும் வெளியிடவில்லை.

தற்போது எதிர்கட்சியினரின் பார்வை அதிபரின் மனைவியின் செலவீனங்களின் மீது திரும்பியுள்ளது. UMP கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எழுப்பிய கேள்விக்கு «Maitignon» பொறுப்பாக பதிலையும் வழங்கியுள்ளது. ஊடகவியலாளரும் அதிபரின் மனைவியுமான Valérie Trierweiler முன்னைய அதிபர் சார்க்கோசியின் மனைவியான Carla Bruni இன் செலவினங்களோடு ஒப்பிடும் போது அரசுக்கு மிகக் குறைவான செலவீனங்களையே ஏற்படுத்துகிறார். 2012 ல் Carla Bruni Sarkozy க்கு எட்டுப் பணியாளர்கள் கடமையில் இருந்தனர். அவர்களுக்கான மாதாந்தச் செலவீனமாக 36448 யூரோக்கள் செலவிடப்பட்டது. தற்போதைய முதல் பெண்மணியின் பணிகளுக்காக மூன்று அரசு பணியாளர்கள் மற்றும் இரண்டு ஒப்பந்தப் பணியாளர்கள் என ஐந்து பேரே கடமையில் உள்ளனர். இவர்களுக்கான செலவீனங்களாக 19 742 யூரோக்களே செலவிடப்படுகின்றது.



லாக்கூர்னேவ் சிவன் கோயில்

**மஹா கும்பாபிஷேகம்**

**21. 06. 2013**

159, Av. Paul V.Couturier - La Courneuve (93)

Tél. : 01 48 36 26 73

# ஒரு வருடம் கடந்துவிட்டது என்ன சொல்லப்போகிறார் அதிபர் ஹொலந்?



பிரான்ஸ் ஜனாதிபதி ஹொலந் தனது முதலாவது ஆண்டை பல ஏற்ற இறக்கங்களுக்கிடையில் பூர்த்தி செய்துள்ளார். ஆனால் தனது முதலாவது ஆண்டு பூர்த்தியை மகிழ்ச்சியாகக் கொண்டாடும் நிலையில் இன்று அவர் இல்லை.

சோசலிசக் கட்சி ஜனாதிபதி பிரான்சுவா மித்திரன் ஆட்சியின் பின்னர் 17 வருடங்கள் கழித்து தற்போதைய ஜனாதிபதி பலத்த எதிர்ப்புகளிற்கு மத்தியில் ஆட்சிக்கு வந்தார். உச்சநிலையில் இருந்த ஆதரவு தற்போது 25 வீதமாக இறங்கி இருக்கிறது.

வேலையற்றோர் தொகை 3 மில்லியனைத் தாண்டியுள்ளது. அரசின் கடன் தொகை கட்டு மீறிச் செல்கின்றது. ஐரோப்பிய நாடுகளிற்கு முன்னுதாரணமாகத் திகழவேண்டிய பிரான்ஸ், பல பின்னடைவுகளைச் சந்தித்த வண்ணம் உள்ளது.

தேர்தலின் போது 60 வாக்குறுதிகளை அள்ளி வீசி அதிகாரத்திற்கு வந்த பிரான்சுவா ஹொலந் தனது வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்ற முடியாத நிலையிலேயே உள்ளார்.

மொத்த 60 திட்டங்களில் 31 திட்டங்கள் மாத்திரம் முன்நோக்கியும் 29 திட்டங்கள் தடங்கலாகவும் உள்ளன.

இந்த சூழ்நிலையில் முன்னாள் ஜனாதிபதி சார்கோசி தற்போதைய அரசியல் நிலையை சாதகமாக்கிக் கொண்டு அரசியலில் முன்னணிக்கு வர முயல்கின்றார்.

### நிறைவேறுகின்ற முக்கிய திட்டங்கள் சில

- 150000 இளைஞர்களிற்கான வேலை வாய்ப்பு ஏற்படுத்தியமை
- மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காக 60 000 புதிய ஆசிரியர்களை இணைத்தல்.
- பொது வைத்தியசாலைகளிலும் தனியார் மருத்துவ மனைகளிலும் விலைகளில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்க ஆவன செய்தல்.
- பிரச்சினைக்குரிய பகுதிகளில் முன்னணி பாதுகாப்பு வலயங்களை அமைத்தமை (Zones de sécurité priorité)
- ஆப்கானிஸ்தானில் இருந்து படைகளை வாபஸ் பெற்றமை
- ஒரே பாலினத்தவர்களுக்கான திருமணச் சட்டத்தை பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் சட்டமாக்கியமை.

### நிறைவேற்றப்படாத திட்டங்கள் சில

- ஆண், பெண்களிற்கான சம சம்பளத்தில் சரியான தீர்வு முன்வைக்கப்படாமை.
- தொழில்புரியும் 6 வீதமான மாற்றுத் திறனாளிகளிற்கு போதிய பாதுகாப்பு ஏற்படுத்தாமை
- தற்போது 67493 பேர் பிரான்ஸ் சிறைகளில் உள்ளனர். இத் தொகை சார்கோசி அரசில் இருந்தவர்களை விடக் கூடுதலானதாகும். குற்றவாளிகளிற்கு மரண தண்டனை விதிப்பதில் சீர்திருத்தம் செய்யாமை.
- அரசு தலைவர், அமைச்சர்களின் சம்பளத்தில் 30 வீதம் குறைத்தல் மற்றும் அரச தலைவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தல் போன்றவற்றிற்கு ஏதுவான சீர் திருத்தங்கள் செய்யப்படாமை.
- பாராளுமன்றத்திற்கு விகிதாசாரப் பிரதிநிதித்துவம் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளில் முன்னேற்றம் இல்லை.
- மதமின்மைத்துவம், அரசை கத்தோலிக்க தேவாலயங்களில் இருந்து தனித்துவம் பேணுவதை தற்போது கைவிட்டுள்ளமை.
- பிராந்திய மொழிகளான பிறித்தோன் (Briton), கோர்ஸ் (Corse), பஸ்க் (Basque), அல்சாசியன் (Alsacien), போன்ற சிறுபான்மை பிராந்திய மொழிகளிற்கு அங்கீகாரம் வழங்காமை.

60 மொத்த திட்டங்களில் 29 திட்டங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவுமில்லாத நிலையில் அதிபர் ஹொலந் நெருக்கடிநிலையைச் சந்திக்கிறார்.

வலிதான்
சரித்திரத்தின் திறவுகோல்
சரிபார்க்க வேண்டுமாயின்
சரித்திரநாயகர்களின்
வரலாற்றைப் புரட்டிப்பாருங்கள்!

பாரிஸ் ஸ்ரீ மாணிக்கவிநாயகர்
தேர்த்திருவிழா
01. 09. 2013

## உங்கள் குழந்தை எப்படி வளர்கிறது...?

- குறைகூறி வளர்க்கப்படும் குழந்தை வெறுக்க கற்றுக்கொள்கிறது...
- அடக்கி வளர்க்கப்படும் குழந்தை சண்டையிடக் கற்றுக்கொள்கிறது...
- கேலி செய்யபடும் குழந்தை வெட்கத்தோடு வளர்கிறது...
- அவமானப்படுத்தபடும் குழந்தை குற்றவாளி ஆகிறது...
- ஊக்குவிக்கப்படும் குழந்தை மன திடம் பெறுகிறது. சின்ன விசயத்துக்கும் கைகொடுத்து பாராட்டுங்க...
- புகழப்படும் குழந்தை பிறரை மதிக்க கற்றுக் கொள்கிறது...
- நேர்மையை கண்டு வளரும் குழந்தை நியாயத்தை கற்றுக்கொள்கிறது...
- பாதுகாக்கப்படும் குழந்தை நம்பிக்கை பெறுகிறது...
- நட்போடு வளரும் குழந்தை உலகத்தை நேசிக்க கற்றுக்கொள்கிறது...

4-5 வயதுகளில் குழந்தைக்கு நன்மை, தீமை பற்றி சொல்லித் தரவேண்டும். தினமும் அரைமணி நேரம் நண்பனை போல உரையாடுங்கள்...!

- Nithyasree Mahadevan (FB)

## உலக நாடுகளில் பிரெஞ்சு உயர்கல்லூரிகளுக்கு மவுசு



பிரான்சில் உள்ள பல்கலைக்கழகங்கள், உயர்கல்லூரிகளின் – Grandes Ecoles பட்டங்களுக்கு சம்பளம் அதிகம் தரும் வேலைவாய்ப்புக்கள் கிடைப்பதாக Financial Times தெரிவித்துள்ளது. பிரான்சில் உள்ள ஏழு உயர்கல்லூரிகளின் பெயர்கள் இப்பத்திரிகையில் வெளியாகி உள்ளன. நிதியியல் மேலாண்மை – Financial Management, சந்தையியல் மேலாண்மை – Marketing Management ஆகிய துறைகளில் முதுகலை – Master பட்டங்கள் உடையவர்களுக்கே இந்த வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. இப்பட்டங்களுக்கு Bac + 5 என தகுதி அளிக்கப்பெறுகின்றன.

இதோ அந்த உயர் கல்லூரிகள் :

1. Insead
2. ESSEC
3. EDHEC
4. ESCP
5. EM
6. Grenoble Graduate School of Business
7. HEC

உலகில் பெயர்போன 200 பல்கலைக் கழகங்களில் அடங்கும் ஏழு பிரெஞ்சுப் பல்கலைக்கழகங்கள்:

1.Ecole Normale de Supérieure d ,ULM.
2.Ecole Polytechnique
3.Université Paris – Sud
4.Université Pierre et Marie –Curie
5.Université de Diderot – Paris – 7
6. Ecole Normale Supérieure de Lyon
7. Université Joseph Fourier Grenoble

## 'முட்டைக் கணக்கீட்டு இரத்தப் பரிசோதனை' பெண்களுக்கு வரப்பிரசாதம்!





பெண்கள் தம்மிடம் எத்தனை முட்டைகள் அதாவது சூல்கள் உள்ளன என்பதை அறிந்து, தமது பெண்மை பற்றி நம்பிக்கை கொள்வதற்கான பரிசோதனை முறை விரைவில் நடைமுறைப் படுத்தப்பட இருக்கிறது. இப்பரிசோதனை முறைக்கு « முட்டைக் கணக்கீட்டு இரத்தப் பரிசோதனை » - Egg Timer blood Test என அழைக்கப்படுகின்றது. மனித குலத்தைத் தழைக்கச் செய்யும் பெண்கள் இந்த இரத்தப் பரிசோதனை மூலம் தமது சூலகங்(சினைப்பை)களில் – Ovaries இருக்கும் சூல் (சினை – முட்டை) கள் எண்ணிக்கையை அறிந்து கொள்ள முடியும். குழந்தை பெறுவது, முன்கூட்டியே வரக்கூடிய மாதவிடாய் நிற்றல், உடல் ஆரோக்கியம் பற்றிய தகவல்களையும் தெரிந்து கொள்வதற்கும், பிள்ளை இல்லை என்றும் ஏங்கும் இளம்தாய்மார்களுக்கும் இது வரப்பிரசாதமாக இருக்கும் என Australian IVF மருத்துவர் ABC தொலைக்காட்சிக்குத் தெரிவித்திருக் கின்றார். பெண்கள் சராசரியாக ஒன்றிலிருந்து இரண்டு மில்லியன் சூல்– முட்டைகளை உடைய தனவந்திகளாக இருக்கின்றார்கள். இவை முதல் மாதவிடாய் வந்து இறுதி மாதவிடாய் வரைக்கும் ஒவ்வொன்றாகக் குறைந்து போகும் கணக்கினை உடையது. இருபது வயதுடைய இளம்பெண்ணுக்கு 200, 000 முட்டைகள் இருக்கும். முப்பது வயதில் பாதியாகக் குறைந்து விடும் நாற்பது வய தளவில் 2000 ஆகக் குறைந்து விடும்.

தேன்கூடு
பேராசிரியர் ச. சச்சிதானந்தம்
பதிவுகள்

## முதல் தமிழ் அகராதியைப் படைத்தவர் இத்தாலியர்




தமிழ் அகராதி வரலாற்றில் முதல் ஒரு மொழி அகராதியாக இடம்பெறுவது, 1732 இல் தொகுக்கப்பட்டு, 1824 இல் வெளியான சதுரகராதி ஆகும். இதன் இலத்தீனியப்பெயர் Thesaurus linguae Tamulicae. இந்த அகராதி பழைய நிகண்டுகளின் செய்யுள் அமைப்பை மாற்றி உரைநடைவடிவில் சொற்களுக்குப் பொருள் தரும் முறையை அறிமுகப்படுத்திய சிறப்பு உடையது. சதுரகராதி ஆசிரியர் தென்னிந் தியாவின் பல ஊர்களில் வாழ்ந்த வீரமாமுனிவர் எனத் தமிழ்ப்பெயர் பூண்ட Costanzo Giuseppe Beschi – ஜோசப் கான்ஸ்டண்ட் பெஸ்கி எனும் இயற்பெயருடைய இத்தாலிய கத்தோலிக்க மதகுரு ஆவர்.

பெஸ்கி இத்தாலியில் ஒரு கிராமத்தில்1680 இல் பிறந்தவர். மதப்பணிக்காக 1711 இல் மதுரையை அடைந்து பலஆண்டுகள் தமிழ் கற்று, 1732 இல் சதுரகராதியைப் படைத்துவிட்டு, 1742(44) இல் மறைந்தார்.

## ஐரோப்பியரிலிருந்து வேறுபடும் பிரெஞ்சியர்

மத அடிப்படையில் ஒற்றுமை உடைய ஐரோப்பியர்கள் பல விடயங்களில் வேறுபடுகின்றார்கள். குறிப்பாக ஒரு பொது இடத்தில் பல ஐரோப்பிய ஜோடிகள் இருக்கும் சமயத்தில், கூச்சமில்லாமலும் நீண்ட நேரமும் முத்தம் கொள்பவர்கள் எனும் வகையில் பார்த்தால் கோல் – la Gaule என்ற பூர்வீகப் பெயருடைய நாட்டுக்கும் லுத்தேசி – Lutécie – என்பதை பழைய பேராக உடைய பிரதேசத்துக்கும் உரியவர்கள் முன்னிலையில் இருப்பார்கள்.

❍ பிரெஞ்சியர் ஜேர்மனியரிலும் பார்க்க மூன்று மடங்கு மீன் உணவையும், ஒன்றரை மடங்கு இறைச்சி உணவுகளையும் கூடுதலாக உட்கொள்கின்றார்கள்.

❍ மோலியேரின் நாட்டவர் ஷேக்ஸ் பியரின் நாட்டவர்களிலும் பார்க்க அதிகமான அளவு மது அருந்துகிறார்கள்.

❍ இஸ்பானியர் பிரெஞ்சியரிலும் பார்க்க அதிகமானளவு புகைபிடிக்கிறார்கள்.

❍ இத்தாலியர் பிரெஞ்சியரை விட அதிகமாக ஆடைகளையும் சப்பாத்துக்களையும் வாங்குகிறார்கள்

❍ பிரெஞ்சியர்களே ஐரோப்பியர்களில் படிப்புக்காக கூடுதலாகச் செலவழிக்கிறார்கள்.

சான்று : INSEE – பிரெஞ்சு தேசிய புள்ளி விபர நிறுவன அறிக்கை.

## உலகப் புத்தக தினம் - World Book




வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகிறான் என்ற பட்டறிவுப் பழமொழியை நினைவுறுத்துவதற்காக உலகநாடுகளில் உலகப் புத்தக தினம் – World Book Day கொண்டாடப்படுகிறது. இத்தினம் ஆண்டுதோறும் ஏப்ரல் – 23 ந் திகதி இடம்பெறுகின்றது.

உலக தினங்களைத் தீர்மானிக்கும் யுனெஸ்கோவினால் –UNESCO, இத்தினம் 1996 ஆண்டிலிருந்து கொண்டாடப்பட்டு வருகின்றது. புத்தகம் மற்றும் நூலாசிரியர்களை மதிப்பதற்காக இத்தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது.

இஸ்பெய்ன் நாட்டு எழுத்தாளரான Miguel de Cervantes Saavedra மறைந்த தினத்தை ஒட்டி உலகப்புத்தகம் மற்றும் பதிப்புரிமை தினம் கொண்டாடப்படுகின்றது. உலகில் வாசித்தல், பதிப்பித்தல் மற்றும் அறிவாற்றல் சார்ந்த சொத்துக்களைப் பதிப்புரிமை மூலம் பாதுகாக்கும் நோக்கத்தினையே இப் bonjour ( bon + jour = நன்னாள்) அறிமுகப் படுத்தப்பட்டது. இந்த 2013 இல் புத்தக தினம் தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்கில் நடைபெற்றது.

பிரான்ஸ் நாட்டில் எல்லா ஊர்களிலும் நூலகங்கள் காணப்படு கின்றன. வாசிப்புப்பழக்கத்தினை ஏற்படுத்துவதற்காகவும், வளர்ப்ப தற்காகவும், தூண்டுவதற்காகவும் பிள்ளைகளுக்கு மட்டுமல்லாது அனைவருக்கும் என, நடமாடும் நூலகம், நூலகப்பேருந்து le Bibliobus என்பது பலஊர்களில் நடமாடுகிறது. இது குறிப்பிட்ட ஊர்ப்பகுதிகளில் குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட நேரம் தரித்து நிற்கும்.






நிலா

நிலாவினைப்பெற்றுக்கொள்ள..

**சங்கீதா அச்சகம்**
39, Bld. de la Chapelle - 75010 PARIS

**ரூபி அச்சகம்**
10, Rue Labat - 75018 PARIS

**CHANGE MAGENTA**
77, Bld. de Magenta - 75010 PARIS

**ASI BOUCHERIE**
195, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**தமிழ்ச்சோலை -பாரிஸ் 17**

**M.G.A. Coiffure**
20, Rue Roger Salengro - 93700 Drancy

**யாழ் இறைச்சிக்கடை**
6, Rue Perdonnet - 75010 PARIS

**SACHI EDUCATION**
70, rue Philippe de Girard - 75018 PARIS

**NRS COIFFURE**
5B, Av. Alexis Varagne - 95 Villiers le Bel

**ராக ஜோதி மளிகை**
C.C Pte de la Ville - 95140 Garges Les Gonesse.

**மாயவர் - மொழிபெயர்ப்பு**
57, Rue Louis Blanc - 75010 Paris

**MGR VIDEO**
5, Rue Perdonnet - 75010 Paris

**SARL VARNISHA COIFFURE**
111, rue de l'Ouest - 75014 Paris

**தமிழாலயம்**
19, Rue Cail, 75010 Paris

**மாலா மளிகை**
4, Place de Salengro - Garges les Gonesse

**அறிவாலயம் புத்தகசாலை**
7, Rue Perdonnet (M°: La Chapelle)

**ஜீவனா சலூான்**
203, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

**SHAEE CASH & CARRY**
193, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

**RESTAURANT PARADISE**
10, Av. Louis Aragon, Bobigny (M°: Bobigny)

**கிருஷ்ணா அச்சகம்**
73, Rue Doudeauville - 75018 Paris



**அருள்மிகு பாரிஸ் முத்துமாரி அம்மன் ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்**



**அலங்கார உற்சவ**
**ஆரம்பம் 9. 6. 2013**
26, Rue du Département
75018 PARIS
(M°: La Chapelle / Marx Dormoy)



**தமிழ்ப் பல்கலைக்கழகம் - தஞ்சாவூர்**
**TAMIL UNIVERSITY – TANJOR**

- பட்டப் படிப்புக்கள் அனைத்தும் தமிழ் மொழி வழி !
- ஒரே சமயத்தில் இரு பட்டங்கள் பெறலாம் !
  - இளநிலை – B .A.B.C.A. BBA ● முதுநிலை – M .A. MBA
  - தொழில் முறைப் பட்டம் – Professional
  - பட்டயம் – Diploma ● சான்றிதழ் – Certificate

❍ பரதநாட்டிய ஆசிரியர் பயிற்சி ❍ இசை ஆசிரியர் பயிற்சி
❍ தமிழ்ப் புலவர் பயிற்சி ❍ யோகா ஆசிரியர் பயிற்சி
❍ கணிப்பொறி பயன்பாட்டியல் ❍ மருத்துவ மூலிகை அழகுக்கலை

**Sachchi education – Annamalai university**
70, rue Philippe de Girard 75018 Paris
Tél : 01 46 07 16 00 / 01 60 28 39 12 / 06 52 66 30 01
E- mail : sachchithanantham@gmail.com


20 வது வருடத்தில்..
உங்களுக்குத் தேவையான மளிகைப்பொருட்கள், மரக்கறி மற்றும் கடலுணவு வகைகளுக்கு நாடுங்கள்!
கோபால் அன் கோ
தரம் - மலிவு
ஏமது வளர்ச்சியில் பங்கேற்ற வாடிக்கையாளர் நண்பர்கள் அனைவரையும் நன்றியுடன் இறுகக் கரம்பற்றிக் கொள்கின்றோம்
La livraison est gratuite pour 300€ d'achat.
வாடிக்கையாளர் வசதி கருதி ....
லாச்சப்பலில்...
72, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle
பொபினியில்...
205, AV. JEAN JAURES,
93000 BOBIGNY.
Tram 1: La Ferme
ஸ்ரெலிங்கிராட்டில்..
84, Rue de l'Aqueduc
75010 Paris.
M° Stalingrad
Lyca SIM
Ortel SIM
9.00 - 5.00€
மலிவு




# குடிசார் கட்டட நிறுவனம்
# Société Civile Immobilière

**பிரான்சில்** வீடுகள், கடைகள் போன்ற கட்டடங்களை தனியொருவரோ அல்லது கணவன் மனைவி இணைந்தோ வாங்க முடியும்.

திருமணம் செய்யாமல் இணைந்து வாழ்வோர், அல்லது குடும்ப உறுப்பினர்கள், அல்லது தங்கள் குழந்தைகளிற்கு சொத்துக்களை வாங்குவோர் SCI என்ற 'குடிசார் கட்டட நிறுவனம்' ஒன்றை ஆரம்பிப்பதற்கு பிரான்சில் இலகுவான வழிகள் உள்ளன.

SCI ஒன்றை பிரான்சில் ஆரம்பிப்பது சுலபம் (Très facile) என்று சொல்லப்படுகின்றது. SCI இற்கான யாப்பு ஒன்றை இலகுவாக நீதிமன்றம் ஒன்றில் பதிவு செய்ய முடியும். இதன் மூலம் சொத்துக்களை இருவரோ அல்லது பலர் கூட்டாகவோ வாங்க முடியும்.

கணவன் – மனைவி விவாகரத்து எடுக்கும் போது SCI இல்லாமல் இணைந்து வாங்கியிருப்பின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சொத்துக்களை நீதிமன்றம் மூலம் விற்கின்ற நிலைமை ஏற்படும். SCI மூலம் வாங்கியிருந்தால் சுலபமான முறையில் சொத்துக்களின் பங்குகளை பரிமாற்றம் செய்ய முடியும்.

SCI மூலம் பங்குகள் பரிமாற்றம் செய்யப்படும்போது மிகக் குறைந்தளவு வரியே செலுத்த வேண்டிய நிலைமை இருக்கும் என்று சொல்லப்படுகின்றது.

இளம் சமுதாயத்தினர் சொத்துக்கள் வாங்குவது என்பது சாதாரண நடைமுறையில் மிகவும் கடினமானதொன்றாகவே உள்ளது. சில பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு SCI மூலம் சொத்துக்களை வாங்குவதற்கும் இலகுவான ஏற்பாடுகள் உள்ளன.

SCI மூலம் சொத்துக்கள் சுலபமாக வாங்கவும், விற்கவும் முடியும். மாற்றி எழுதுவதற்கான செலவுகளும் மிகவும் குறைவானதாகவே உள்ளது.

பலர் இணைந்து வாங்குகின்ற வசதி SCI இல் இருப்பதால் பொது அமைப்புக்களும் சமய நிறுவனங்களும் கூட SCI மூலம் தங்களுக்குத் தேவை யான கட்டடத்தை வாங்குகின்ற நடைமுறை பிரான்சில் உள்ளது.

**நிலா உங்களுக்கு பிடித்திருக்கிறது. மகிழ்ச்சியைத் தருகிறது என நீங்கள் கருதினால், நிலாவில் பிரசுரமாகும் விளம்பரதாரர்களுக்கு நன்றி சொல்லுங்கள்!**

நிலா தொடர்பான, உங்கள் அபிப்பிராயங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு : சங்கீதா அச்சகம் www.nilafrance.com

## ● Velib

பாரிஸ் நகரில் துவிச்சக்கர வண்டிப் பாவனையாளர்கள் தொடர்ந்து கூடிய வண்ணம் உள்ளது. 2007ம் ஆண்டிலிருந்து பாரிஸ் மாநகர சபையினால் நடாத்தப்படும் Velib சேவையில் 250000 பேர் தங்கள் வருடாந்த அட்டையைப் புதுப்பித்துள்ளனர். கடந்த ஆண்டில் 224000 ஆக இருந்த பாவனையாளர்கள் 2013 இல் 26000 பேரால் அதிகரித்துள்ளது.

## ● LA POSTE

2015ம் ஆண்டில் பாரிஸ் மாகாணத்திற்கான கடித விநியோகத்திற்காக 6000 பேர் மேலதிகமாக வேலைக்குச் சேர்க்கப்பட உள்ளனர். அத்துடன் மற்றைய வேலைகளிற்காக 250 பேரும் தபால் அலுவலகத்தில் இணைக்கப்பட உள்ளனர்.

## ● EURO க்கு எதிர்ப்பு

36 வீதமான ஜேர்மனியர் யூரோ நாணய பாவனைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். ஜேர்மன் நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை அதிகரித்து வருவதற்கு யூரோ நாணயம் காரணமாக உள்ளதாக 76 வீதஜேர்மானியர்கள் எண்ணுகின்றனர். இத் தகவல்களை ARD எனப்படும் ஜேர்மனிய தொலைக்காட்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

HLM வீடுகளின் வாடகைகள் சராசரியாக 1,92 சதவீதத்தால் அதிகரிக்கவுள்ளது. 2013ல் எடுக்கப்பட்ட வாக்கெடுப்பின் பின்னரே இவ் உயர்வு அறிவிக்கப் பட்டுள்ளது. இதேவேளை, அரசு மட்டுமல்ல சமூக நிதிகளில், HLM வீடுகளில் வாழ்பவர்களும் பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டு தவிக்கிறார்கள் என்பதை அரசு மறந்துவிடக் கூடாது என சமூக நல அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

கிருஷ்ணா அச்சகம்
தரம் - குறித்த தவணை - நியாய விலை
☎: 01 42 51 29 92 Fax : 01 42 51 35 25
e-mail: krishnafrance@yahoo.com
73, Rue Doudeauville - 75018 PARIS (Métro : Château Rouge)